03
July - August 2007

EC Ways (Pvt) Ltd.
No. 4, 1/1, Venderwert Place, Dehiwela, Sri Lanka.
T.P.: +94 (0) 11 567 3483, Fax: +94 (0) 11 273 3765
Web: www.ecways.com, E-mail: info@ecways.com

FREE ISSUE

# EC LIFE

*Make Life Easy*

## வெற்றியின் இரகசியம்



Discount Coupon உள்ளே

- ICBT
- Panama Traders
- American College of Higher Education

மலிவு விலைச் சந்தைகள்
நினைத்ததை அடையும் மந்திரம்
ஆங்கிலத்தைக் கண்டால் அச்சமா?
உடல் பருமனைக் குறைக்க...

WESTERN UNION MONEY TRANSFER
Lakecity homes
ACHE
DEC Daffodil Education Centre
PCP

Making Life Easy through Effective Communication

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Hotline: 0773 616 798

# EC Ways...

## ஊடக - விளம்பர சேவைகள்...

## Media - Advertising Services

- வர்த்தக விளம்பரங்கள்
    - பிறந்தநாள், திருமண வாழ்த்துக்கள்
- நினைவஞ்சலிகள்
    - மரண அறிவித்தல்கள்

**அனைத்துலகம்:**
ஐக்கிய இராச்சியம், கனடா, அவுஸ்ரேலியா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் முன்னணி ஊடகங்களில் விளம்பர ஏற்பாடு

**Local:**
Commercial Advertisement, Greetings and Obituaries

**International:**
Advertise with prominent media outlets in UK, Canada, Australia and European Countries

**வீரகேசரி, தினக்குரல், சுடரொளி**

மற்றும் அனைத்து ஆங்கில, சிங்கள ஊடக விளம்பரங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

**புத்தக அச்சாக்கப் பணிகள்**
**Book Publishing Works**

சஞ்சிகைகள், புத்தகங்களை அழகுற வடிவமைத்து தரமான முறையில் அச்சிட்டுப் பெறலாம்.

மற்றும்...

கணினி தட்டச்சு பக்க வடிவமைப்பு படவரைபு பணிகளும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

Typesetting
Layout and Graphic Designing
Magazines, Books Publishing
Jobs Undertaken

## கல்வெட்டுகள்

அன்புக்குரிய உறவுகளின் நினைவாக வெளியிடும் கல்வெட்டுகளை காலத்துக்கும் நிலைக்கக்கூடிய பொக்கிஷமாக சிறப்பான முறையில் ஆக்கித் தருகிறோம்.




EC Ways (Pvt) Ltd.
No. 4, 1/1, Venderwert Place,
Dehiwela.
T.P.: 011 567 3483, Fax: 011 273 3765
Web: www.ecways.com, E-mail: info@ecways.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EC LIFE
Make Life Easy

EC Ways (Pvt) Ltd. No.4, 1/1, Venderwert Place, Dehiwela.
Tel: +94 (0) 11 567 3483, Fax: +94 (0) 11 273 3765
Web: www.inllanka.com, E-mail: info@ecways.com

## தகவலே வழி...

EC Life மூன்றாவது இதழில் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி.

தமிழ் சஞ்சிகை வரலாற்றில் ஒரு இலவச சஞ்சிகையாக EC Life இன் மூன்றாவது இதழ் தொடர்ந்து வெளிவருகிறது. இதைச் சாத்திய மாக்கிய வாசகர்களுடனும், வர்த்தக விளம் பரதாரர்களுடனும் இணைந்து இந்த மகிழ்வைக் கொண்டாடுகிறோம்.

இது தகவல் யுகம். தகவல்களே உலகை ஆள்கின்றன. தகவல் தெரிந்தவர் எதையும் சாதிக்கலாம்.

இரத்மலானையிலிருந்து வத்தளைக்குப் போகும் பாதை எதுவென்று கேட்டால், பல பாதைகளைக் கூறலாம். இதில் தூரம் குறைந்த பாதை எது? வாகன நெரிசல் குறைந்த பாதை எது? அதிக சோதனை நெருக்கடிகள் குறைந்த பாதை எது? என்ற பல்வேறு தகவல்களும் எமக்குத் தெரிந் தால் பயணத்தை இலகுவாக்கலாம்.

இது குறுக்கு வழியல்ல? இலகு வழி?

எதையும் இலகுவாகச் செய்து முடிப் பதுதானே நலம்?

அதற்கு வேண்டிய தகவல்கள் தேவையான வர்களுக்குக் கிடைக்கப்பெற்றால் வாழ்வு வளமாகும்.

நாளாந்த வாழ்வின் பல்வேறு தேவைக ளையும் நிறைவேற்றுவதற்கு இவ்வாறான இலகுவான, சாத்தியமான பல வழிகளைக் காட்டுவதுதான் EC Life இன் இலக்கு.

உணவு, உடை, உறையுள் என்ற மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும், இதற்குரிய கல்வி, பொருளாதாரத்தைப் பெருக் குவதற்கும் உதவும் தகவல்களைத் தாங் கியபடி தொடர்ந்து உங்களைச் சந்திப்போம்.

Managing Editor
**K Rushangan**
Graphic Editor
**K Piratheepan**
Editorial Team
**S A Sarmila**
**R Suthagini**
**M Pirassath**
**T Purujoththaman**
Marketing Manager
**R Ranjan Jeffry**
Marketing Assistant
**J Ananthan**
Marketing Consultant
**S Elango**

# வெற்றியின் இரகசியம்

எதிர்காலம் பற்றிச் சரியாகத் திட்டமிடுவது பலருக்கும் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. தனது திறமை, எதிர்பார்ப்புகள், விருப்பு, வெறுப்புகள் என்பவை பற்றியெல்லாம் சரியாக மதிப்பீடு செய்யத் தெரியாமல் அவசரப்பட்டு முடிவெடுப்பதால், வாழ்நாள் முழுவதும் அல்லலுறும் பலரை நாம் சந் தித்திருக்கிறோம். இது கல்வி முதற்கொண்டு, பார்க்கும் தொழில் வரையில் பொருந்தக் கூடிய ஒரு விடயமாகும்.

உதாரணத்துக்கு, ஒருவர் தான் என்ன தொழிலைப் பார்ப்பது என்பதை எவ்விதம் தெரிந்தெடுப்பது? தமது எதிர்காலத்தை உன் னதமாக அல்லது இருள்சூழ்ந்ததாக மாற்றக் கூடிய தொழிலை ஒருவர் எப்படித் தெரிந் தெடுக்கிறார்?

எந்தத் தொழிலைச் செய்வதென்பதில் எவருக்கும் எந்தவிதக் கட்டாயமுமில்லை. ஆனால், சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் அவர்களைச் சில குறிப்பிட்ட தொழில்களில் அமர்த்திவிடுகின்றன. வாழ்நாள் முழுவதும் ஒரேவிதமான தொழிலில் மூழ்கிக் குப்பை கொட்டிக்கொண்டே அவர்கள் இளைப்பாறி விடுகின்றனர். அவர்களைக் கேட்டால் தாம் விரும்பி அந்தத் தொழிலை மேற்கொள்ள வில்லையென்றே கூறுவார்கள். இது படிப் புக்கும், திருமணத்துக்கும்கூடப் பொருந்தும்.

தற்காலத்தில் பெரும்பான்மையானவர்கள் ஆரம்பக்கல்வியைக் கற்றிருக்கின்றனர். ஆனால், சிறுவயதிலேயே தாம் எதிர்காலத்தில் என்ன விதமான தொழிலைத் தெரிவுசெய்யப் போகிறோம் என்ற ஒரு திட்டம் அவர்களுக்கு இருந்திருக்காது. புத்திசாலித்தனம் உள்ளவர்கள் இளமையிலேயே தமது எதிர்காலத்தைச் சரியாகத் திட்டமிட்டு கல்வியைத் தொடர் வர். அல்லது, பெற்றோர் பிள்ளைகளுக்குச் சரியான பாதையைக் காட்டிவிடுவர். இப் படியானவர்கள் கொடுத்து வைத்தவர்களே.

வாழ்க்கையில் பெருவெற்றி பெற்ற மனிதர் களைப் பார்த்தால், அவர்கள் தமது சொந்த விருப்பங்களைப் பின்பற்றியே தமது எதிர் காலத்தைத் தெரிவுசெய்திருக்கிறார்கள். உலகின் முதலாவது பணக்காரரான பில் கேட்ஸ் (*Bill Gates*) ஹவார்ட் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியிருக்காவிட்டால் எல்லோரையும் போல மாதச்சம்பளத்துடன் ஒரு வேலையெடுத்து வழமையான வாழ்க்கையில் "செட்டில்" ஆகியி ருப்பார். ஆனால் அவர், அதற்குப் பதிலாக தான் விரும்பிய பாதையான மென்பொருள் உருவாக்கலைக் (*Software Development*) குறி வைத்து அதனை நோக்கிச் சென்றார். இன்று அவரால் உலகெங்கும் கோடிக்கணக்கான வர்கள் பயனடைகிறார்கள். அவரும் கோடிக் கணக்காகச் சம்பாதிக்கிறார். இது போலவே பலர் தாம் விரும்பிய பாதையைத் தேர்ந் தெடுத்து அதில் தாம் எப்படி வெல்ல முடியும் என முயற்சி செய்து வெற்றியும் பெறுகிறார்கள்.

இடைவிடாத முயற்சியுடையோர் தமக்கு விருப்பமான தொழிலைக் குறிவைத்துப் பாடுபட்டு இறுதியில் வெற்றியும் அடைகி றார்கள். தோமஸ் அல்வா எடிசன் பல நூற் றுக்கணக்கான உலோகங்களைப் பரிசோதனை செய்து தோல்வி கண்டபின்னரே, தங்ஸ்டன் இழையைக் கண்டுபிடித்தார். ஆபிரகாம் லிங்கன் பல தோல்விகளையடுத்து, சமூக சேவை மற்றும் அரசியலில் ஈடுபட்டு வெற்றியும் பெற்றார்.

ஒருவர் தனது இயற்கையான திறமையை இனங்கண்டு வெளிப்படுத்துவது எப்போதுமே அவருக்குக் கைகொடுக்கும். அதை எப்படித் தொடர்ந்து வருமானத்திற்கும் வகைசெய்யும் ஒன்றாக மாற்றுவது என்பதில்தான் இறுதி வெற்றி தங்கியிருக்கிறது.

## Guide to Pages

| | |
|---|---|
| EC Finance | 04 |
| EC Shopping | 06 |
| EC Education | 07 |
| EC Entertainment | 13 |
| EC Domestic | 15 |
| EC Guide | 16 |
| EC Health | 17 |
| EC Electronics | 18 |
| EC PC | 20 |
| EC Real Estate | 21 |

## குணநிதி வணிகச் சொல்விளக்க அகராதி

உலகின் முதலாவது ஆங்கிலம் - தமிழ் வணிகச் சொல்விளக்க அகராதியாக "குணநிதி வணிகச் சொல்விளக்க அகராதி", என். சிறிரஞ்சன் அவர்களால் தொகுக்கப்பட்டு, குமரன் பதிப்பக வெளியீடாக வெளிவந்துள்ளது.

இந்த அகராதி வெளிவந்தமையினையொட்டி, இலங்கையில் அகராதிகளுக்கான தேவை, பயன்பாடு, அகராதியாக்கம் மற்றும் வெளியீட் டில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் போன்ற விடயங்கள் தொடர்பிலான கலந்துரையாடல் ஒன்று, எதிர்வரும் 28-08-2007 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்கத் தில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில், அகராதியின் தொகுப்பாசிரியர் என்.சிறிரஞ்சன், பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, தெ.மதுசூதனன், பேராசிரியர் என்.பாலகிருஸ்ணன், குமரன் புத்தக இல்ல அதிபர் க.குமரன் ஆகியோர் உரையாற்ற வுள்ளனர்.

இந்த நிகழ்வில் குணநிதி வணிகச் சொல் விளக்க அகராதியினை விசேட கழிவு விலையான 500 ரூபாவுக்குப் பெற்றுக் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைத்ததை அடையும் மந்திரம்

## லீசிங் LEASING

**பெ**றுமதிவாய்ந்த பொருளொன்றை உடனடியாக அதன் முழுப் பெறுமதியான பணத்தைக் கொடுத்து வாங்க முடியாதவர்களுக்கு லீசிங் என்ற குத்தகைக் கொடுப்பனவு முறை கைகொடுக்கிறது. பல ஆயிரங்களை, அல்லது இலட்சங்களை ஒரே தடவையில் கொடுத்து பொருளொன்றை வாங்குவதற்குப் பதிலாக, மாதாந்தம் சில ஆயிரங்களை ஒழுங்காகச் செலுத்தி அந்தப் பொருளை வாங்கும் நடைமுறையே லீசிங் என்று எளிமையாக விளக்கலாம். இதன்போது, குறிப்பிட்டளவு தொகைப் பணத்தை வட்டியாக நீங்கள் செலுத்தவேண்டியிருக்கும் என்றாலும், பொருளொன்றை ஒரேயடியாகப் பணம் கொடுத்து வாங்குவதைவிட இவ்வாறு மாதாந்தக் கொடுப்பனவின் மூலம் அதனை வாங்கும்போது, ஒரேயடியான முதல் இழப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுகிறது.

பொதுவாக இன்று அனைத்து வங்கிகளுமே லீசிங் வசதியை வழங்குகின்றன. சாதாரணமாக வீட்டுப் பாவனைப் பொருள்கள் முதல், வாகனங்கள், அலுவலக உபகரணங்கள் வரையில் எதையுமே லீசிங் முறையில் நாம் கொள்வனவு செய்ய முடியும்.

### என்ன செய்யவேண்டும்?

உதாரணமாக ஒரு மோட்டார் சைக்கிளை நீங்கள் லீசிங் முறையில் கொள்வனவு செய்ய விரும்பினால்,

- முதலில் லீசிங் வசதியை வழங்கும் வங்கியை, அல்லது நிறுவனமொன்றை அணுகி உங்களுக்கு அந்த வாகனத்தைக் கொள்வனவு செய்ய அவர்கள் லீசிங் வழங்குவார்களா என்பதை உறுதிப்படுத்தி, தேவையான விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- பின்னர், வாகனம் விற்பனை செய்யும் முகவரிடம் நீங்கள் கொள்வனவு செய்ய விரும்பும் வாகனத்தின் பெறுமதியைக் குறிக்கும் Quotation ஐ எழுத்து மூலம் குறித்த வங்கியின் பெயருக்கு எழுதிப் பெறவேண்டும்.
- இந்த Quotation ஐ, பூர்த்திசெய்யப்பட்ட லீசிங் விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து வங்கியில் கையளிக்க வேண்டும்.
- லீசிங் வழங்கும் வங்கிக்கு உங்கள் மாத வருமானத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களையும், இரண்டு Guarantors இன் ஒப்புதலையும் (நேரடியாக வங்கி அதிகாரியின் முன்னிலையில் கையொப்பமிடவேண்டியிருக்கும்) பெற்றுக்கொடுத்தால், நீங்கள் கொள்வனவு செய்ய விரும்பும் வாகனத்துக்கான Purchase Order ஐ மோட்டார் வாகன முகவர் நிலையத்துக்கு அவர்கள் வழங்குவார்கள்.
- பிறகென்ன? Purchase Order ஐ வாகன முகவர் நிலையத்திடம் கையளித்துவிட்டு, வாகனத்தை ஓட்டிச்செல்லவேண்டியதுதான்.

குறிப்பு:

- லீசிங் முறை கொள்வனவின்போது, குறிப்பிட்ட பொருளை வாங்குவதற்கான மாதாந்தக் கட்டுப்பணத்தைச் செலுத்தக்கூடியளவு மாத வருமானத்தை பெறுபவராக நீங்கள் இருப்பது அவசியம். இதற்கான ஆவணங்கள் கோரப்படும்.
- லீசிங் முறையில் கொள்வனவு செய்யும் பொருளை முழுமையாக காப்புறுதி செய்யுமாறு நீங்கள் கோரப்படுவீர்கள். மாதாந்தக் கட்டுப்பணத்துக்கு மேலதிகமாக இந்தக் காப்புறுதிச் செலவீனத்தையும் நீங்கள் தாங்க வேண்டியிருக்கும்.
- அதனாலென்ன? சுமார் ஒரு இலட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த பொருளொன்றை, மாதாந்தம் சுமார் 5 - 6 ஆயிரம் ரூபா கட்டுப் பணத்தில் வாங்கிவிட முடியும் என்பது நன்மையான விடயம்தானே?

**சில லீசிங் நிறுவன விபரங்கள்:**

*HNB Leasing* Tel: 2661728, 2661784

*Com Shakthi Leasing* Tel: 2432122

*Seylan Smart Leasing* Tel: 2456840

*CF Leasing* Tel: 2300555


*LOLC* Tel: 5880880

## பணத்தைப் பெருக்கச் சில வழிகள்...

**ப**ணத்தைப் பெருக்குவதற்குப் பல வழிகள் உண்டு. ஆனால், இவை எல்லாவற்றுக்குமே சிறந்த திட்டமிடல் இருக்கவேண்டியது அவசியமாகும். இங்கே சில வழிகளைச் சொல்கிறோம். உங்களுக்குப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து முயலலாம்.

### வங்கி வைப்பு:

வங்கியில் சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள் செய்வதன் மூலம் பணத்தைப் பெருக்கலாம். இதிலும், சேமிப்பு வைப்பை விட நிலையான வைப்பில் அதிக வட்டி கிட்டும். நிலையான வைப்பிலும் 3, 6, 9, 12 மாதங்கள் முதல் பல வருடங்கள் வரையிலான காலப்பகுதிகளுக்கு வைப்பிலிடலாம். இதில் வட்டி வீதங்களை அவதானித்து பொருத்தமானதைத் தெரிவுசெய்யலாம்.



### பங்குச்சந்தை முதலீடு:

இதுவும் ஒரு சிறந்த வழிமுறையாகும். பங்குச்சந்தைத் தரகர்களூடாக சிறந்த பெறுமதிவாய்ந்த பங்குகளைக் கொள்வனவு செய்து தொடர் இலாபம் சம்பாதிக்கலாம் (பார்க்க *EC Life April-May 2007 Issue*)

### காப்புறுதிச் சேமிப்பு:

இப்போது பல காப்புறுதி நிறுவனங்கள் காப்புறுதிக்கு மேலதிகமாக போனஸ் மற்றும், காப்புறுதி காலம் முடிந்ததும் முழுத் தொகையையும் வட்டியுடன் வழங்கும் திட்டங்களை வழங்குகின்றன. இது மட்டுமன்றி சில காப்புறுதி நிறுவனங்கள் முதலீட்டுத் திட்டங்களையும் வழங்குகின்றன.

### வியாபார/வர்த்தக முயற்சி:

இது ஒரு சவாலான அதேநேரம் அதிக இலாபமீட்டக்கூடிய வழிமுறையாகும். எனினும், இதில் சற்று நிதானம் முக்கியம். பொருத்தமான வியாபார நடவடிக்கையைத் தெரிவு செய்து, கவனமாகத் திட்டமிட்டு முதலீடு செய்வது அவசியமாகும். ஓரளவு வியாபார அனுபவமும் இதற்கு அவசியமாகும்.

### தங்க நகைகள்:

அதிகளவு தங்க நகைகளை வாங்கிச் சேர்ப்பது தமிழர்களின் பொதுவான ஒரு பழக்கம். கடைசியில் திருடர் பயம் காரணமாக அவற்றை வங்கி லொக்கர்களில் போட்டுப் பூட்டி வைக்கவேண்டியும் ஏற்படுவதுண்டு. எனினும், மிக வேகமாக பெறுமதி அதிகரிக்கும் ஒரு பொருளாக தங்கம் காணப்படுவதால், இது ஒரு சிறந்த முதலீடாகவும் அமையும். அவசரத்துக்கு மிகக் குறைந்த வட்டி வீதத்துடன் வங்கியில் அடகு வைத்தோ, அல்லது தேவையான போது நல்ல விலைக்கு நகைகளை விற்றோ இலாபமீட்ட முடியும்.

### வீடு/காணி:

இதுவும் ஒரு சிறந்த முதலீடுதான். நமது பாவனைத் தேவைக்கு வாங்குவதே பெரும் பாடாக உள்ள காலத்தில், முதலீடாக காணி, வீடு வாங்குவது சிரமமான விடயம்தான். எனினும், உங்களிடம் போதியளவு பணம் இருக்குமானால், மேலதிகமாக காணி, அல்லது வீடு வாங்கி வைத்துக்கொண்டால், பின்னர் நல்ல விலைக்கு அவற்றை விற்று இலாபமீட்டலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MMBL
MONEY TRANSFER
An Aitken Spence MMBL COMPANY

WESTERN UNION
MONEY TRANSFER

## வெளிநாடுகளில் இருந்து பணத்தைப் பெற
## மிக வேகமானதும் இலகுவானதுமான வழி.




## நாடு முழுவதும் 500 க்கும் மேற்பட்ட
## MMBL முகவர் நிலையங்கள்

இல 300, காலி வீதி, கொழும்பு 03. உடனடி அழைப்பிற்கு: 0114529999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலிவு விலைச் சந்தைகள்




**பொ**ருள்களின் விலைகள் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக அதிகரித்து வருகின்றன. எரிபொருள்களின் விலையேற்றம் தினமும் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளில் அதிகரிப்பை ஏற்படுத்தியவண்ணமே உள்ளன. இந்த நிலையில் ஓரளவுக்கேனும் மலிவாக பொருள்களை வாங்கக்கூடிய இடங்களைத் தேடிச்சென்று தேவையான பொருள்களை வாங்குவது அவசியமாகிறது.

*EC Life April-May* இதழில் புறக்கோட்டை மனிங் மரக்கறிச் சந்தை தொடர்பாக எமது வாசகர்களுக்கு அறியத்தந்திருந்தோம். இங்கு மரக்கறி வகைகளை மிகவும் மலிவாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை, குறிப்பிட்ட காலப்பகுதியில் நிலவிய விலைகளை ஒப்பிட்டு வழங்கியிருந்தோம்.

இந்த இதழில், கொழும்பு நகரின் பல பகுதிகளிலுமிருக்கும் மரக்கறி, மீன், இறைச்சி, பழ வகைகளுக்கான சில சந்தைகள் தொடர்பான விபரங்களைத் தருகிறோம். ஓய்வாக கிழமைக்கு ஒரு தடவையேனும் உங்களுக்கு மிகவும் அருகாகவிருக்கும் இந்தச் சந்தைகளில் ஒன்றுக்குச் சென்று தேவையான பொருள்களை வாங்கினால் பணத்தை மீதப்படுத்துவதுடன், தரமான பரந்த தெரிவுகளையும் பெற்றுக்கொள்ளலாம். ஒரு தடவை முயன்றால் பயனை உணர்ந்துகொள்வீர்கள்?

## கிருலப்பனை சந்தை

ஹைலெவல் வீதியில் கிருலப்பனைச் சந்தியில், நிரந்தரச் சந்தைக் கட்டடத்தில் அமைந்திருக்கும் கிருலப்பனை சந்தையில் மரக்கறி, பழ வகைகள், மீன், இறைச்சி முதல் நாளாந்த உணவுத் தேவைக்கு அவசியமான அனைத்து அத்தியாவசியப் பொருள்களையும் வாங்க முடியும். (பஸ் வழி: 138, 141)

## கல்கிசை (Mount Lavinia) சந்தை

கல்கிசை *(Mount Lavinia)* சந்தியில், சமுத்திராசன்ன வீதியில் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தச் சந்தை கூடுகிறது. இங்கு மரக்கறி, பழ வகைகள், இறைச்சி, மீன் அனைத்தையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். (பஸ் வழி: 100, 101, 102, 155, 147)

## கரஹம்பிட்டியா சந்தை

தெஹிவளை மிருகக்காட்சி சாலை வீதியில் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் இந்தச் சந்தையும் மரக்கறி, பழ வகைகள் போன்ற அத்தியாவசியப் பொருள்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய இடமாகும். (பஸ் வழி: 176, தெஹிவளை ஹில் வீதியூடாகப் பயணிக்கும் 252, 156 மற்றும் 119)

## நுகேகொட சந்தை

நுகேகொட சந்திக்கு அருகில், ஸ்ரான்லி திலகரட்ண மாவத்தையில், நுகேகொட புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள இந்தச் சந்தையில் தினமும் மரக்கறி, பழவகைகள் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். (பஸ் வழி: 163, 176, 118, 183)

## வத்தளை தேவாலய சந்தை

வத்தளை புனித அந்தோனியார் தேவாலயத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடும் இந்தச் சந்தை மரக்கறி, பழ வகைகள் மற்றும் நாளாந்தப் பாவனைப் பொருள்களை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய பிரபலமான ஒரு சந்தையாகும். (பஸ் வழி: 260, 187, 104, 107...)

## வெள்ளவத்தை சந்தை

வெள்ளவத்தை ஃபஸல்ஸ் ஒழுங்கையில் அமைந்திருக்கும் இந்தச் சந்தையிலும், இதற்கு அருகாக மனிங் வீதி, மற்றும் காலி வீதி மருங்கில் ஆங்காங்கு சிதறிக் காணப்படும் விற்பனை நிலையங்களிலும் தரமான மரக்கறி, மீன், பழ வகைகளை வாங்க முடியும். விலை சற்று அதிகமாக இருந்தாலும், தரமான பொருள்களை இங்கு பெற்றுக்கொள்ளலாம். அத்துடன், தமிழர்கள் பெரும்பாலும் பயன்படுத்தும் பிரத்தியேகமான சில காய்கறி, பழ வகைகளை இங்கே வாங்க முடிவது இதன் விசேட சிறப்பம்சமாகும்.

## Shopping செல்வதற்கு முன்



**கா**சைக் கரியாக்கி விட்டதாக *Shopping* முடித்தபின் வருத்தப்படுவோரையும், எதை வாங்குவது என்று தெரியாமல் கண்டதையும் வாங்கி பின்னர் அதனை எப்படி உபயோகப்படுத்துவதென்று புரியாமல் விழிபிதுங்க நிற்பவர்களையும் நாம் கண்டதுண்டு. இந்தப் பிரச்சினைகளுக்கு என்னதான் தீர்வு?

*Shopping* செல்வதற்கு முன்னர் நிதானமாக யோசித்து, முன்கூட்டியே திட்டமிட்டுக்கொள்ள வேண்டும். இதோ சில ஆலோசனைகள்.

- எதற்காக *Shopping* செல்கிறீர்கள் என்பதில் உறுதியாக இருங்கள்.
- எதனை வாங்குவது என்று முன்கூட்டியே ஓரளவுக்கேனும் தீர்மானித்துக் கொள்வதுடன், நீங்கள் கொள்வனவு செய்யத் தீர்மானித்துள்ள பொருளின் சந்தை விலை பற்றி விடயமறிந்த நண்பர்கள், உறவினர்களுடன் கலந்தாலோசியுங்கள்.
- எந்தெந்தக் கடைகளுக்குச் செல்வதென்றும், அங்கு என்னென்ன பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும் என்றும் *Shopping* செல்ல முன்னரே அறிந்து கொள்வது வீண் அலைச்சலைத் தவிர்க்க உதவும்.
- அதிகளவு பணத்தை எடுத்துச் செல்லாமல், நீங்கள் செல்லவுள்ள கடைகளில் கடன் அட்டை அல்லது காசு அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படுமா என்பதை உறுதிப்படுத்தி அவற்றை உடன் கொண்டு செல்லலாம். அல்லது நீங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கியின் கிளைகள் அருகில் உள்ளனவா என்பதை ஆராய்ந்து உங்களது வங்கி அட்டையை எடுத்துச் செல்லாம்.
- அருகிலிருக்கும் வழமையான ஏதோவொரு கடைக்குச் சென்று பொருள்களை வாங்கி வருவது சுலபம் என்பது எமது நினைப்பு. அவ்வாறன்றி, புதிய இடங்களை அறிந்து கொண்டு, அவற்றுக்கு ஒரு தடவை சென்று தேவையான பொருள்களை வாங்கினால், விலை வேறுபாடுகளை அறிய முடிவதுடன், வித்தியாசமான தெரிவுகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.
- தேவையான எல்லாப் பொருள்களையும் ஒரே இடத்தில் இலகுவாக வாங்கிக்கொள்வதற்கு *Shopping Complex*கள் அருமையான தீர்வு. ஆனால், அவையே தேவையற்ற பல பொருள்களையும் எம் கண்முன் காட்சிப்படுத்தி மயக்கி வீண் செலவுகளுக்கு வழி வகுக்கும் இடங்களாகவும் உள்ளன. எனவே, இப்படியான இடங்களுக்குச் செல்லும்போது என்ன வாங்க வந்தோம், என்ன வாங்குகிறோம் என்பதுகுறித்து மிகவும் அவதானமாகச் செயற்படுவது சிறப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Web: www.americancollege.lk

# உங்கள் எதிர்காலத்தை வளமாக்க, ACHE கல்வி நிறுவனம் வழங்கும் ஓர் அரிய வாய்ப்பு!




க.பொ.த. சாதாரணதரத்தின் பின் உங்களது பட்டப்படிப்பை ஆரம்பிப்பதன் மூலம் காலத்தை சேமியுங்கள்.

ஆங்கில மொழி, கணித அறிவை மேம்படுத்த விசேட கற்கை நெறி வழங்கப்படும்.

11 வருட அனுபவம். 540க்கும் அதிகமான மாணவர்கள் ஏற்கனவே பல்கலைக்கழக மாற்றுத்திட்டத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளனர்.

2+2 கற்கை நெறி மூலம் 2 வருட கல்வியை இலங்கையிலும் ஏனைய 2 வருட கல்வியை அமெரிக்கா அல்லது கனடாவிலும் பயில முடியும்.

4 வருட பட்டப் படிப்பை இலங்கையிலேயே பூர்த்தி செய்வதற்கும் வாய்ப்பு உண்டு.

முகாமைத்துவம், வணிகக்கல்வி, சந்தைப் படுத்தல், பொறியியல் துறை, முதற்கட்ட மருத்துவம், விமானநிலைய முகாமைத்துவம் விருந்துபசார முகாமைத்துவம், விநியோக முகாமைத்துவம், மனோதத்துவம் மற்றும் 500க்கு மேற்பட்ட பட்டப் பாடநெறிகளை உங்கள் விருப்பத்துக்கமைய தொடர சந்தர்ப்பம்.

100க்கும் அதிகமான பட்டப் பாடநெறிகள். எந்த ஒரு பட்டப்படிப்பையும் AMERICAN COLLEGE OF HIGHER EDUCATION கல்வி நிறுவனத்தில் தொடர முடியும்.

கலாநிதிப்பட்டம் பெற்ற அனுபவம் வாய்ந்த சிறந்த வெளிநாட்டு ஆசிரியர்கள் இலங்கையில் பாடநெறிகளை அடிக்கடி நடாத்துவது குறிப்பிடத்தக்கது.

30க்கும் அதிகமான பாடநெறிகள் ஒவ்வொரு தவணையிலும் வழங்கப்படுகின்றன.

1/5 பங்கை மாத்திரமே முதலீடு செய்வதன் மூலம் 80% செலவை சேமிக்க முடியும்.

## 40% விசேட கழிவு !

இவ் விளம்பரத்துடன் இக் கூப்பனையும் பூர்த்தி செய்து பட்டப் பாடநெறிகளை தேர்ந்தெடுப்பவர்களுக்கு 40% விசேட கழிவு பதிவுக் கட்டணத்தில் வழங்கப்படும்

பெயர் : ....................................

முகவரி: ....................................

....................................

தொலைபேசி இலக்கம் : ....................................

தேர்ந்தெடுக்கும் பாடநெறி : ....................................

....................................

இச்சலுகை செப்டம்பர் 2007, 5ஆம் திகதி வரை செல்லுபடியாகும்

## 70ற்கு மேற்பட்ட குறுகிய கால டிப்ளோமா பாடநெறிகள்

### ஆங்கில பாடநெறிகள்
Spoken English & Grammar
Comprehensive English
English Literature
Writing Research Papers
Business English

### சர்வதேச தராதர பாடநெறிகள்
IELTS
TOEFL
SAT I & II
GRE
GMAT

### வணிகக்கல்வி பாடநெறிகள்
Marketing
Management
Organizational Behavior
Human Resource Management
Business Administration
International Relations
Strategic Management

### ஆசிரியர் பாடநெறிகள்
Primary Teacher Training
Early Childhood Education

### தகவல் தொழில்நுட்ப பாடநெறிகள்
Microsoft Office
Web Designing & Development
Object Oriented Programming
Computer Hardware, Networking & Web Technology
MCP, MCSA, MCSE
A+ Certification
Desk-Top Publishing
Multimedia & Video Production
Auto CAD

### உளவியல் பாடநெறிகள்
Psychology for Teenagers
General Psychology
Abnormal Psychology
Child Psychology
Counseling Psychology
Sociology, etc.

### தொடர்பாடல்
Public Speaking
Mass Communication

## 10% விசேட கழிவு !

இவ் விளம்பரத்துடன் இக் கூப்பனையும் பூர்த்தி செய்து குறுகிய கால பாடநெறிகளை தேர்ந்தெடுப்பவர்களுக்கு 10% விசேட கழிவு கட்டணத்தில் வழங்கப்படும்

பெயர் : ....................................

முகவரி: ....................................

....................................

தொலைபேசி இலக்கம் ....................................

தேர்ந்தெடுக்கும் பாடநெறி : ....................................

....................................

இச்சலுகை செப்டம்பர் 2007, 5ஆம் திகதி வரை செல்லுபடியாகும்

ACHE

## AMERICAN COLLEGE OF HIGHER EDUCATION

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

| | |
|---|---|
| DEHIWELA | : (011) 5558666 |
| KANDY | : (081) 4474527 |
| GALLE | : (091) 5454533 |
| NEGOMBO | : (031) 2233240 |
| MATARA | : (041) 2222853 |
| KURUNEGALA | : (037) 2220735 |

**MAIN CAMPUS**
**23, HOSPITAL ROAD, DEHIWELA.**
Tel: 011-2712216, 011-4203977
E-Mail: admissions@americancollege.lk

**BRANCH CAMPUSES**
**502, PERADENIYA ROAD, KANDY.**
Tel: 081-4474527, 081-4479417

**286 B, WAKWELLA ROAD, GALLE.**
Tel: 091-2234585, 5454532, 5454533

**210, COLOMBO ROAD, NEGOMBO.**
Tel: 031-2233240, 5676757 / 8

**33, AKURESSA ROAD, MATARA.**
Tel: 041-2222853, 5679974, 5679977

**401, WEHARA JUNCTION, COLOMBO ROAD, KURUNEGALA.**
Tel: 037-2220735, 5625551 / 2


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# This is your chance!



## ACHE நிறுவனத்தில் DIPLOMA, DEGREE கற்கைநெறிகளுக்கு 10-40 வீதம் விசேட கழிவு (செப்டம்பர் 30 வரை மாத்திரமே)

இலங்கை மாணவர்கள் இப்போது அதிகம் வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புக்களில் ஆர்வம் கொண்டுள்ளனர். எனினும், இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளும் வழிவகைகள் தெரியாமல் அவர்கள் சிரமப்படுகின்றனர். இலங்கையில் அமெரிக்க கல்வித் திட்டத்தின் முன்னோடியான American College of Higher Education (ACHE) இலங்கை வாழ் மாணவர்கள் வெளிநாட்டுக் கல்விவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்கு இலகுவான வழிகளைக் காட்டுகிறது.



உலகளவில் பிரசித்தி பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகங்களான Broward Community College மற்றும் Excelsior College என்பவற்றின் பாடத்திட்டங்களைப் பின்பற்றி, 22 பிரதான கற்கைநெறிகளை ACHE இலங்கையில் வழங்குகிறது. முதல் இரண்டு வருடங்கள் இலங்கை ACHE கல்வி நிறுவனத்திலும், மாணவர் திறமைக்கேற்ப மிகுதி இரண்டு வருடங்களை அமெரிக்கா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, போன்ற நாடுகளின் மிகவும் பிரசித்தி பெற்ற பல்கலைக்கழகங்களிலும் கல்வியைத் தொடர ACHE வாய்ப்



பளிக்கின்றது. நான்கு வருடங்களும் இலங்கையிலேயே கல்வியைத் தொடர விரும்பினும் தொடரலாம்.



கொழும்பு, தெஹிவளையில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டிருக்கும் ACHE, கண்டி, காலி, நீர்கொழும்பு, குருணாகலை, மாத்தறை போன்ற நகரங்களிலும் மாணவர்களின் வசதி கருதி கிளைகளை நிறுவி கல்வி போதனையில் ஈடுபட்டு வருகின்றது.

தனது 14 வருட அனுபவத்தில் அது, இலங்கை மாணவர்கள் மட்டுமன்றி, ஆசிய நாடுகளான மாலைதீவு, இந்தியா, மற்றும் பங்களாதேஷ் போன்ற நாடுகளின் மாணவர்களும் கல்வி கற்று அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ய வாய்ப்பளித்திருக்கின்றது.

க.பொ.த சாதாரண தரத்தின் பின் மாணவர்கள் பட்டப்படிப்பை ஆரம்பிப்பின் இலகுவாக ஆங்கில மொழியில் பாடநெறிகளை தொடர்வதற்கு வசதியாக, ஆங்கில மொழி மற்றும் கணித அறிவை மேம்படுத்தும் விசேட கற்கை நெறிகள் இங்கே ஒழுங்கமைத்துத் தரப்படுகின்றன.



ACHE கல்வி நிறுவனத்தில், முகாமைத்துவம், வணிகக்கல்வி, சந்தைப்படுத்தல், பொறியியல் துறை, ஆரம்ப மருத்துவம், விமானநிலைய முகாமைத்துவம், விருந்து பசார முகாமைத்துவம், விநியோக முகாமைத்துவம், மனோதத்துவம் உள்ளிட்ட 500க்கு மேற்பட்ட டிப்ளோமா பாடநெறிகளையும் உங்கள் விருப்பத்துக்கமைய கற்க முடியும்.

இலகுவில் தொழில்வாய்ப்பைப் பெற்றுத் தரக்கூடிய குறுகிய கால டிப்ளோமா கற்கை நெறிகளான வணிக மற்றும் உளவியல் பாடநெறிகள் - Diploma In Management, Diploma in Marketing, Diploma in Business studies, Diploma in Psychology, Advanced Diploma in Counseling Psychology, Diploma in child Psychology மற்றும், தகவல் தொழில்நுட்ப பாடநெறிகளான Diploma in Computer Studies, Diploma in Web Design & Development, and Advanced Diploma in Computer Hardware, Web Technology, Diploma in Multimedia & Video Productions, Diploma in Object Oriented Programming என்பவற்றுடன், சர்வதேச தராதர பாடநெறிகளான SAT, TOEFL, GRE / GMAT, IELTS ஆங்கில பாட நெறிகளான, Diploma in English, Spoken English and grammar, Children's Advanced Diploma in English என்பனவும் மிகவும் தேர்ச்சிபெற்ற அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடாத்தப்படுகின்றன.

பல மாணவர்கள் தம் திறமை மூலம் புலமைப் பரிசுகளைப் பெற்று மிகவும் குறைந்த பாடக் கட்டணத்தையே செலுத்துகின்றனர். இக்கற்கை நெறியில் 1/5 பங்கை மாத்திரம் முதலீடு செய்வதன் மூலம், 80% பாடநெறிக் கட்டணச் செலவைக் குறைக்கலாம்.

540 க்கும் மேற்பட்ட மாணவர்கள், இவ்வாறு, இக்கற்கைநெறி மாற்றுத் திட்டத்தின் மூலம் வெளிநாடுகளில் தமது பட்டப்படிப்புக்களை மேற்கொள்வது குறிப்பிடத்தகுந்த ஒரு விடயமாகும்.

தற்போது EC Life சஞ்சிகையில் வெளிவந்திருக்கும் ACHE நிறுவனத்தாரின் விளம்பரத்திலுள்ள கூப்பனை நிரப்பி தெஹிவளையிலுள்ள ACHE நிறுவனத்துக்குச் சென்று சமர்ப்பித்தால் நீங்கள் தெரிவுசெய்யும் பட்டப்படிப்புக் கற்கைநெறிக் கட்டணத்தில் 40 வீதம் வரையான கழிவு உடனே வழங்கப்படும். இது போன்று டிப்ளோமாக் கற்கைநெறிக்கும் குறித்த விளம்பரத்திலிருக்கும் கூப்பனை நிரப்பிச் சென்றால், அதற்கு 10 வீதம் கழிவு வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
**Dehiwela Campus**
23, Hospital Road, Dehiwela.
Tel : 011-2712216 / 2715195 / 4203977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் டிப்ளோமா மற்றும் பட்டச் சான்றிதழ் கற்கைநெறி

உயர்கல்வியைத் தொடர்வதற்கு பல் கலைக்கழகத்துக்குத்தான் செல்லவேண்டும் என்ற நிலை இப்போது படிப்படியாக மாறிவருகிறது. திறந்த பல்கலைக்கழகம், தேசிய கல்வியியல் கல்லூரி என உயர்கல்வி வாய்ப்புக்கான வசதிகள் இன்று விரிவடைந்து செல்கின்றன. இந்த வரிசையில் இப்போது தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் இணைந்துகொண்டுள்ளது.

தொழில்வாண்மையான சமூகப் பணித் துறையில் டிப்ளோமா, பட்டச் சான்றிதழ் மற்றும் முதுமாணி கற்கை நெறிகளைத் தொடர தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம் வழி செய்துள்ளது.

### என்ன பயன்?

இன்று எழுந்துள்ள பயிற்றப்பட்ட சமூகப் பணியாளர்களுக்கான (Social Workers) தேவையின் அடிப்படையில் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களில் ஏராளமான வேலை வாய்ப்புகளைப் பெறக்கூடிய வகையில் இக் கற்கை நெறிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. மேலும், இக் கற்கைநெறிகளைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கைக்கு வெளியே உயர் கல்வியைப் பெறுவதோடு, வேலைவாய்ப்புக்களையும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. குறிப்பாக, அரசசார்பற்ற நிறுவனங்களில் அதிகளவு வேலைவாய்ப்புக்களைப் பெறுவதற்கு இந்தக் கற்கைநெறி கைகொடுக்கும்.

### அடிப்படைத் தகுதிகள்...

**டிப்புளோமா கற்கைநெறி**

- கல்விப் பொதுத் தராதர (உ/த) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குரிய அடிப்படைத் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்
- மத்திய அல்லது மாகாண அரச அலுவலகங்களில் மூன்று வருடத்திற்குக் குறையாத அனுபவத்தோடு நிரந்தரப் பதவியுடையவராக இருப்பது வரவேற்கப்படும்.

**சமூகப் பணியில் இளமாணிப்(BA) பட்டப்படிப்பு**

- கல்விப் பொதுத்தராதர (உ/த) பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக்குரிய அடிப்படைத் தகுதியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- ஆங்கிலத்தில் உயர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு:

**National Institute & Social Development**
155/5, PSMPA Building,
Castel Street, Colombo 08.
Telephone: 011-2690934
Email: nisd@sltnet.lk

தமிழில் தொடர்புகளுக்கு: 077-3867602

# ஆங்கிலத்தைக் கண்டால் அச்சமா?

ஆங்கிலம் என்றதுமே எம்மில் பலருக்கு பயம் தொற்றிக்கொள்கிறது. அது ஏதோ ஒரு பிடிக்க முடியாத பிசாசு என்பதுபோல் எம்மை நாமே தாழ்த்திக்கொண்டு விடுகிறோம். ஆனால், இது தேவையற்ற ஒரு அச்சம். எந்தவொரு மொழியும் ஆரம்பத்தில் கற்பதற்குச் சிரமமான ஒன்றுதான். வெள்ளையர்கள் தமிழ் கற்பதாக இருந்தாலும் இந்தப் பிரச்சினை இருக்கத்தான் செய்யும்.

ஆங்கில மொழியறிவை விருத்திசெய்து கொள்ளவேண்டுமாயின் நாம் முதலில் அச்சம், தயக்கம், தாழ்வு மனப்பான்மை என்பவற்றைத் தவிர்த்து, துணிவுடன் ஆங்கிலத்தை பேச முனையவேண்டும். ஆங்கிலம் தெரிந்ததாகப் பெருமைப்பட்டுக்கொள்ளும் தமிழர்கள்தான் நமது ஆங்கிலத்தில் ஆயிரத்தெட்டுப் பிழை பிடித்து மட்டந்தட்டுவார்கள். வேண்டுமானால் அசல் ஆங்கிலேயர் எவரிடமாவது சென்று பேசிப்பாருங்களேன். தங்களுடைய மொழியை நாம் இந்தளவேனும் பேசுகிறோமே என்று எம்மைத் தோள்தட்டிப் பாராட்டி ஊக்குவிப்பார்கள்.

### ஆங்கிலம் கற்பதற்குச் சில இலகுவான ஆலோசனைகள் இதோ...

**தெரிந்த அளவிலிருந்து ஆரம்பியுங்கள்:** உங்களுக்குத் தெரிந்தளவு, உங்களால் முடிந்தளவு விடயங்களைத் தொடர்ந்து வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உதாரணத்துக்கு, தினசரி ஆங்கிலப் பத்திரிகையில் உங்களுக்குப் பிடித்தமான சுவாரசியமான விடயங்களை தினமும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்.



**புதிய சொற்களைக் கற்றுக்கொள்ளுங்கள்:** வாசிக்கும்போது இடருப்படும் தெரியாத சொற்பதங்களை உடனுக்குடன் அகராதியின் உதவியுடன் கற்றுக்கொள்ளுங்கள்.

**பேசுங்கள்:** உங்களுடைய நண்பர்கள், உறவினர்கள், உங்களோடு சேர்ந்து கற்கும் ஆர்வம் கொண்டவர்களுடன் ஆங்கிலத்திலேயே பேசுங்கள். இதை ஒரு விளையாட்டாக எடுத்து, ஒரு குறிப்பிட்டளவு நேரமோ, அல்லது ஒரு நாள் முழுவதுமோ ஆங்கிலத்தில் மட்டும்தான் பேசுவது என்று சபதம் எடுத்துக்கொண்டு ஆங்கிலத்திலேயே எல்லாத் தொடர்பாடல்களையும் மேற்கொள்ளுங்கள்.

**பொருத்தமான கல்வி:** உங்களுடைய ஆங்கில அறிவு மட்டத்திலிருந்து ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய சரியான இடத்தைத் தெரிவு செய்து, தெரிந்ததிலிருந்து, தெரியாததை நோக்கி வெற்றி நடை போடுங்கள்.

### கொழும்பில் ஆங்கிலம் கற்பதற்குப் பொருத்தமான சில இடங்கள்:

***Aquinas College***
*No.990, Maradana Road, Colombo 8.*
*Tel: 011 2694014-5*

***British Council***
*No.49, Alfred House Gardens, Colombo 03.*
*Tel: 011 4521549*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அதிகளவு தமிழ் மாணவர்கள் கல்வி பயிலும் CEYLINCOவின் பம்பலப்பிட்டி ICBT CAMPUS

சிலிங்கோ கூட்டு நிறுவனத்தின் கல்விப் பிரிவான ICBT Campus ஆனது, உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட கல்வித் திட்டங்களை, உலகத்தரமான பல்கலைக்கழகங்கள், மற்றும் கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, உயர் தரத்தில், கட்டுபடியான முதலீட்டுடன் வழங்க வேண்டும் என்ற சிலிங்கோ கூட்டு நிறுவனத்தின் தலைவர் கலாநிதி தேசமானிய லலித் கொத்தலாவலவின் சிந்தனையில் உருவான ஒன்றாகும். இது இலங்கை முதலீட்டுச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு நிறுவனமாகும்.



"தெற்காசியாவிலேயே முன்னணி வகிக்கும் உயர் கல்வி வழங்குநராக விளங்குதல்" என்ற நோக்கத்துடன் செயற்பட்டுவரும் இந்த நிறுவனம், உலகளவில் மிகவும் நன்மதிப்பைப் பெற்ற பல பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களுடன் இணைந்து, தொழில் சந்தைக்குத் தேவையான தரமான மனித வளத்தை உருவாக்கி, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது.

ICBT Campus ஆனது University of Western Sydney, Curtin University of Technology, Department of Education, Training & Employment, South Australia, Edexel International - UK, Asian Institute of Technology, Middlesex University - UK Sikkim Manipal University - India ஆகிய நிறுவனங்களுடன் இணைந்தும், அவற்றின் பங்காளர் நிறுவனமாகவும் செயற்பட்டு வருகின்றது.

இலங்கையில் கொழும்பு பம்பலப்பிட்டி, கல்கிசை மற்றும் கண்டி ஆகிய இடங்களில் செயற்பட்டுவரும் ICBT Campus ஆனது, பம்பலப்பிட்டியிலுள்ள அதன் கிளையில் மிகவும் கலைநுட்பத்துடன், நவீன போதனா சாதனங்களுடன் அமைக்கப்பட்ட விரிவுரை அறைகள், கணினிக்கூடங்கள், இணையப் பாவனை வசதிகள், மிகப்பிந்திய உள்ளடக்கங்களைக் கொண்ட நூலகம் ஆகியவற்றைக் கொண்டு, அதிகளவு தமிழ் மாணவர்கள் கல்வி பயில்கின்ற ஓரிடமாக அமைந்துள்ளது.

இங்கு பயிற்றுவிக்கப்படும் பாடநெறிகளைத் தொடரும் மாணவர்களுக்கு அவுஸ்ரேலியா, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவிலுள்ள பல்கலைக்கழகங்களுக்கான அனுமதியைப் பெறும் ஒழுங்குகளையும் ICBT Campus செய்து தருவதால், வெளிநாடு சென்று தமது கல்வியைத் தொடர்வதற்கு ICBT Campus இலகுவாக வழியேற்படுத்திக் கொடுக்கும்.

இந்த நிறுவனத்தில் தற்போது BTEC Higher National Diploma (HND) in Computing (UK) மற்றும் BTEC Higher National Diploma (HND) in International Business Management (IBM) UK ஆகிய கற்கைநெறிகள் முதன்மை பெற்றுத் திகழ்கின்றன. இவற்றுள் BTEC HND in Computing ஆனது, ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் பல பல்கலைக்கழகங்களினால் அங்கீகரிக்கப்பட்டு, அவற்றின் பட்டப்படிப்புக்களுக்கான மேலதிக நுழைவுத் தகுதியாகவும் கொள்ளப்பட்டுவரும் ஒரு பாடத்திட்டமாகும். இது உலகளவில் பல தொழில்சார், பல்தேசிய கம்பனிகளால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகவும் விளங்குகிறது.

இதேபோல், BTEC (HND) in International Business Management (IBM) - UK என்ற, சர்வதேச வணிக முகாமைத்துவ டிப்ளோமா எனும் பாடநெறியானது, இன்றைய வணிக உலகில் வெற்றி பெறுவதற்கு வேண்டிய அறிவையும், திறனையும் வழங்கும், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பல பட்டப்படிப்புக்களைத் தொடர்வதற்கான முதற்படியாக அமைகிறது. சர்வதேச வணிகச் சூழலில் ஒரு முகாமைத்துவ நிலைக்கு உயர்வதற்கு வேண்டிய அதியுச்ச தகைமையைப் பெறுவதற்கான அறிவையும், திறன்களையும், ஆளுமையையும் இது வழங்குகிறது.



இந்த இரண்டு பாடநெறிகளுக்குமான நுழைவுத்தராதரம் வருமாறு,

- க.பொ.த. உயர்தரத்தில் இரண்டு பாடத்தில் சித்தி
- க.பொ.த. சாதாரண தரத்துடன் தொழில் அனுபவம்

இங்கே தரப்பட்டுள்ள கூப்பனை நிரப்பி ICBT Campus இல் சமர்ப்பிப்பதன் மூலம், எந்தவொரு பாடநெறிக்கான கட்டணத்திலும் 10% கழிவை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

**10% விசேட கழிவு**

இக் கூப்பனைப் பூர்த்திசெய்து நீங்கள் தேர்ந்தெடுக்கும் பாடநெறியின் கட்டணத்தில் 10% விசேட கழிவினைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

பெயர் :....................................................

முகவரி :....................................................

....................................................

தேர்ந்தெடுக்கும் பாடநெறி :

....................................................

இச்சலுகை செப்டெம்பர் 2007 வரை மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு...



**ICBT CITY CAMPUS**
317A, Galle Road,
Colombo 04.
Tel: 4937774
Fax: 4541018

**ICBT CAMPUS**
31&33, Hotel Road,
Mount Lavinia.
Tel: 4210021
Fax: 4203170


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**BTEC**
from Edexcel International

**edexcel**



# Fast forward qualification to an International Degree

INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY
ICBT

**ICBT CAMPUS**
No. 31& 33, Hotel Road,
Mount Lavinia.
Tel: 4210021
Fax: 4203170

**ICBT CITY CAMPUS**
317A, Galle Road,
Colombo 04.
Tel: 4937774
Fax: 4541018

**ICBT KANDY CAMPUS**
497, Peradeniya Road, Kandy.
Tel: 081-4482000, 081-4482006/7
Fax: 081-4482009

## HND in IBM (UK)
### BTEC Higher National Diploma in International Business Management

***Programme***
- 3 Semesters
- Australian and UK trained faculty
- State-of-the-art campus-facilities
- Guaranteed pathway to Australian, UK and
- Other international degrees
- Easy payment monthly installment scheme

***Recognition***
- Awarded by EDEXCEL International UK
- Recognized by 105 universities in UK, USA and Australia.
- Credit exemptions to either Australian or British universities.

***Entry Requirements***
- 2 passes from the G.C.E Advanced level
- G.C.E. O/L with working Experience

***Duration***
1 1/2 years (18 months)

## HND in Computing (UK)
### BTEC Higher National Diploma in Computing

***Programme***
The BTEC HND is recognized by most universities in the UK and the USA, and provides advanced entry to the degree programes conducted by these universities. the BTEC HND is also recognized by many professional bodies and multinational companies worldwide.

***Recognition***
- BTEC Higher National Diploma from Edexcel UK Training for Microsoft Certified Professional (MCP) & Java Certified Professional (JCP) certification.
- Exemptions up to 2 years from BSc.(Hon) Degrees from many British, Australian and US Universities.
- Exemptions to BSc (British Computer Society) exams.
- 100% credit transfer to middlesex & Nothumria Universities UK.

***Entry Requirements***
- 2 passes from the G.C.E Advanced level
- G.C.E. O/L with working Experience

***Duration***
1 1/2 years (18 months)

E-mail: icbtinfo@icbtcampus.edu.lk
www.icbtcampus.edu.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DEC Daffodil Education Centre · GLOBAL ART · MIQUEST WORLDWIDE · MiKids UK English



## UK English

- 10 Learning activities with multimedia
- Research based on UK National Literacy Strategy and American National Reading Panel
- International UK English Programme
- Innovate, creative & professional
- Individual attention - UK 2007 syllabus
- Trained teachers - UK work books
- Speak & Write within months
- Totally interactive



**Programme**

| | | |
|---|---|---|
| Foundation | - Age 3 & above | Durations: 1.30 hrs. per week |
| Level 1 | - Age 5 & above | |
| Level 2 | - Age 6 & above | |

## Global ART

- International creative art programme
- Syllabus based art-drawing & creative programme
- Thematic based syllabus with drawing books
- Brings out the intelligence & creativity of students
- Trained teachers in an art ambient classroom
- Presently in 12 countries certificate after completion
- National & International Participation



**Programme**

| | | |
|---|---|---|
| Foundation 1 to 4 | - Age 4 & above | Durations: 1.30 hrs. per week |
| Level 1 to 6 | - Age 8 & above | |
| Advance | - Age 13 & above | |

Join Classes at
**Daffodil Education Centre**
No. 36, IBC Road, Wellawatta, Colombo 06.
Telephone: 0602 159053
Mobile: 0777 562375, 0779 682785




# சிறார்களின் ஆங்கில, சித்திரக்கலை திறன் விருத்திக்கான அறிவுக்கூடம்

*D*affodil Education Centre, இன்று வெள்ளவத்தையில் பிரபலமாகி வரும் சிறார்களுக்கான ஆங்கிலம் மற்றும் சித்திரக் கற்பித்தல் வசதிகளைக் கொண்ட ஒரு அறிவுக்கூடமாகும். மூன்று வயது முதல் பதின்மூன்று வயது வரைக்குமான சிறார்களுக்கு அவர்களின் வயதுக்கேற்றபடி படிநிலைகளைக் கொண்டு இப்பாடவிதானங்கள் வடிமைக்கப்பட்டுள்ளன.

## Mikids UK English

"Mikids UK English" என்றழைக்கப்படும் ஆங்கிலக் கற்கை நெறியானது, இங்கிலாந்தின் தற்போதைய பாடத்திட்டமாகும். இது அழகான பாடல்கள், உரையாடல்கள் அடங்கிய ஒலி, ஒளிப் பேழைகள் மூலம் சிறார்களை கவரும் வண்ணம் வடிவமைக்கப் பட்டுள்ளது. ஆடலும், பாடலுமாக பிள்ளைகள் கற்கும்போது "படிக் கின்றோம்" என்ற கஷ்டமான உணர்வே இல்லாமல் பாடங்கள் மிகத் துல்லியமாக சிறார்களின் மனதில் பதிகின்றது. "Phonics" எனப்படும் ஒலி வடிவங்களைக் கொண்டு ஆங்கிலத்தைக் கஷ்டமில்லாது கற்பதுவே இப்பாடத்திட்டத்தின் சிறப்பம்சமாகும்.

ஒவ்வொரு ஆங்கில எழுத்துக்கும் அதற்குரிய Phonics ஒலி வடிவத்தைக் கொடுத்து அதன் மூலம் உச்சரிக்கும் திறனையும் சொற்களைத் தாங்களாகவே எழுதும் திறனையும் இது ஊக்குவிக் கின்றது. ஆங்கிலம் என்பது கஷ்டமான மொழியல்ல, கவர்ச் சியாகவும், இலகுவாகவும் கொடுத்தால் சிறார்களின் அடித்தளம் உறுதியாகும் என்பதற்கு இக்கற்கை நெறி சான்றாகும்.

இக்கற்கைநெறியால் பிள்ளைகளின் கேட்கும் திறனும், சிந்திக்கும் ஆற்றல், விடையளிக்கும் ஆற்றல், சொற்களை எழுதும், ஆக்கும் திறன், பேசும்திறன் என்பனவும் வலுவூட்டப்படுகின்றன.



*Daffodil Education Centre திறப்புவிழா வைபவத்தின்போது...*

## Global Art

"Global Art" இன்று சர்வதேச நாடுகள் பலவற்றால் அங்கீகரிக்கப் பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு திட்டமான பாடவரையறையைக் கொண்டு கற்பிக்கப்படும் சித்திரக்கலையாகும். மற்றைய சித்திரப் பாடப் போதனைகள் போலல்லாது, இது சிறார்களின் கற்பனைத் திறனையும், படைப்பாக்கத் திறனையும் மெதுமெதுவாகக் கட்டி யெழுப்பும் சிறப்பான பாடவிதானத்தைக் கொண்டதென்பது கல்விச் சிந்தனையாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

மலேசிய நாட்டைச் சேர்ந்த திரு.கோ என்ற சித்திரக்கலை ஆர்வலரே இதற்குத் தந்தையாவார். மலேசியாவில் இருந்தே தருவிக்கப்படும் வர்ணப் பூச்சுக்களும் (Crayons) பாடப்புத்தகங்களும், பிள்ளைகளின் வரையும் திறனை ஊக்குவிப்பதற்கென்றே வடிவமைக்கப்பட்டுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# National MUSEUM

பல நூற்றாண்டுகள் பாரம்பரியத்தைக் கொண்ட பொருள்கள் மற்றும் வரலாற்றுச் சிறப்புக்கள் பற்றி ஒரே நாளில் அறிந்து கொள்ளவேண்டுமாக இருந்தால், தேசிய அரும்பொருள் காட்சியகத்துக்குத்தான் (National Museums) செல்லவேண்டும்.

தொன்மையான பல்வேறு அம்சங்கள் இங்கே நிறைந்துள்ளன. பிரதானமாக இங்கே ஐந்து பிரிவுகள் காணப்படுகின்றன. விஞ்ஞானம், கலாசாரம், இயற்கை வளப் பாதுகாப்பு, நூலகம், வெளியீடு ஆகிய ஐந்து பிரிவுகளாக அரும்பொருள்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞானப் பிரிவு விலங்கியல், தாவரவியல், புவியியல் ஆகிய மூன்று உப பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. விலங்கியல் பிரிவில் சுமார் 23 ஆயிரத்திற்கும் அதிகமான பறவைகள், விலங்குகள், மீன்கள் என்பவை பற்றி அறியக்கூடியதாக உள்ளது. தாவரவியல் பிரிவில் 1,500 க்கும் அதிகமான தாவரங்கள் பற்றியும், புவியியல் பகுதியில் பல நூற்றாண்டுகள் பழமையான நவரத்தினங்கள், வைரங்கள், கனியுப்புக்கள், பல வகையான கற்களையும் காணக்கூடியதாக உள்ளது.



